கட்டப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த நிதியைப் பயன்படுத்தி சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெருந்துறை தொகுதிக்குட்பட்ட திங்களூர் பகுதியில் கடந்த ஆண்டு சார்–பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி வழங்கியிருந்தாலும்கூட, இதுவரை அப்பணியைத் தொடங்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார். அதில், ஏதாவது இடம் தொடர்பான பிரச்சினை இருக்கலாம் அல்லது வேறு ஏதாவது பிரச்சினை இருக்கலாம். அந்தப் பிரச்சினை என்னவென்று துறையின்மூலம் ஆய்வு செய்து, கூடிய விரைவில் அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

217—

கொய்யாச் சாறு தொழிற்சாலை

***12646—திரு. ஏ.பி. நந்தகுமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதியில் கொய்யாச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதியில் கொய்யாச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

முற்பகல் 10–50

திரு. ஏ.பி. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதியில் ஒடுகத்தூர், மேலரசம்பட்டு, நெமந்தபுரம், வண்ணாந்தாங்கல், மடயப்பட்டு, சேர்ப்பாடி மற்றும் அவற்றின் சுற்று வட்டாரப் பகுதிகளில் அதிகப்படியாக கொய்யாச் சாகுபடி விவசாயிகளால் செய்யப்படுகிறது. விளைச்சல் அதிகமாக இருக்கின்ற நேரத்தில், அது வீணாகக்கூடிய நிலை ஏற்படுகிறது. விளைச்சல் இருக்கின்றபொழுது, விளையக்கூடிய கொய்யாப் பழங்களை அருகிலுள்ள சென்னை, வேலூர் மற்றும் பெங்களூரு போன்ற நகரங்களுக்குக் கொண்டு சென்று வியாபாரம் செய்கிறார்கள். குறிப்பாக, சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு மிகவும் பயன்தரக்கூடிய மருத்துவ குணம் கொண்டது கொய்யா என மருத்துவர்கள் ஆலோசனை கூறுகிறார்கள். எனவே, விளைச்சல் காலங்களில் உற்பத்தியாகின்ற கொய்யாப் பழங்கள் வீணாகாத வகையில், கொய்யாச் சாறு தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தத் திட்டம் பரிசீலனையில் இல்லையென்று தெரிவித்திருக்கிறார்கள். எங்களுடைய பகுதியிலே விளையக்கூடிய கொய்யாப் பழங்களைப் பாதுகாக்கும் வகையில் தயவுசெய்து அந்தத் தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டும். அவ்வாறு தொழிற்சாலை அமைத்துத் தருகின்றபட்சத்தில், அங்குள்ள விவசாயிகள் பயனடைவார்கள் என்பதையும் தெரிவித்து, அதைச் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

2017 ஜூலை 18]

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதியில் 332 ஹெக்டேர் பரப்பளவில் கொய்யா சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதியில் தோராயமாக ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் ஆண்டொன்றுக்கு 15 டன் அளவில் கொய்யா சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் கொய்யா முழுவதும் நுகர்வோரின் தேவைக்குப் பயன்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் போதிய அளவில் கொய்யா விளைச்சல் இல்லாததால், அரசு சார்பில் கொய்யாச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை. எனினும், தனியார் தொழில் முனைவோர்கள், அருகிலுள்ள மாவட்டங்களில் விளையும் கொய்யாப் பழங்களைக் கொள்முதல் செய்து, அணைக்கட்டு தொகுதியில் கொய்யாச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க முன்வரும்பட்சத்தில், மாவட்ட தொழில் மையம்மூலம், தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரி மானியம், வேலைவாய்ப்புப் பெருக்க மானியம் போன்ற உதவிகளை வழங்கி புதிய தொழிற்சாலை அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏபி. நந்தகுமார் அவர்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதி கிராமங்கள் நிறைந்த பகுதி. அணைக்கட்டு தொகுதியிலுள்ள கிராமங்களில் இருக்கின்ற படித்த மாணவர்கள், இளைஞர்கள் அதிகப்படியாக இராணுவத்தில் பணிபுரிகிறார்கள். மழை பெய்யாத காரணத்தினால், விவசாயம் பொய்த்துப்போய் அந்தப் பகுதியில் இருக்கின்ற இளைஞர்களும், பொதுமக்களும் வேலையில்லாமல் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே, அணைக்கட்டு பகுதியில் ஒரு சிப்காட் தொழில் வளாகம் அமைத்துத் தர வேண்டும். மேலும், விவசாயிகள் நிறைந்திருக்கின்ற காரணத்தினாலும், அப்பகுதியில் மலர் சாகுபடி அதிகளவில் இருப்பதாலும், வாசனைத் திரவியத் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்றும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதி, ஒடுகத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கின்ற மாணவி ஹேமலதா என்பவர் இந்திய அளவில் ஈட்டி எறிதல் போட்டியில் பங்குபெற்று, போட்டியிட்ட அனைத்திலும் வெற்றிபெற்று, காமன்வெல்த் போட்டியில் பங்கேற்பதற்காக இங்கிலாந்து நாட்டிற்குச் செல்லவிருக்கிறார். அவர் ஓர் ஏழை மாணவி. நம் நாட்டிற்குப் பெருமை சேர்க்கின்ற அந்த மாணவிக்கு இந்த அரசு தேவையான வசதிகளை செய்து தருவதோடு, அணைக்கட்டு தொகுதியைச் சேர்ந்த இந்த மாணவி அடுத்து நடைபெறவிருக்கக்கூடிய ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க இந்த அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார், உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால், இப்படி நெடுநேரமாக்குகிறீர்களே! (குறுக்கீடு) இவ்வாறு செய்தால் மற்ற உறுப்பினர்களுக்கு எப்படி வாய்ப்புத் தர முடியும்? (குறுக்கீடு) வாய்ப்பு தரவில்லையென்றாலும் வருத்தப்படுகிறீர்கள். (குறுக்கீடு) கேள்வி கேட்க வாய்ப்புக் கொடுத்தாலும் இப்படி நேரத்தை வீணாக்குகிறீர்கள். சீக்கிரம் கேள்வியை முடியுங்கள்.

திரு. ஏ.பி. நந்தகுமார்: ஆகவே, அந்த மாணவிக்கு தகுந்த உதவிகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' என்று சொல்வதைப்போல, 'ஈட்டி வீசுவதில் சிறந்த தமிழ்நாடு' என்று சொல்லும்வகையில், அந்த மாணவி தகுதிபெற்று இங்கிலாந்து நாட்டிற்குச் செல்லவிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்தாலோசித்து, அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூலை 18]

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் சார்ந்திருக்கக்கூடிய அணைக்கட்டு தொகுதியிலே ஒரு சிப்காட் தொழிற்சாலை அமைப்பது குறித்து கேட்டிருந்தார்கள். சிப்காட் தொழிற்சாலையைப் பொறுத்தவரையிலும், அது தொழில் துறை அமைச்சருடைய துறையாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

சிட்கோ தொழிற்சாலை அமைப்பதைப் பொறுத்தவரையில், எதிர்காலத்தில் மாவட்ட நிருவாகத்தினுடைய கருத்துருவைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதியிலே வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டிருந்தார். வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்க தனியார் எவரேனும் முன்வரும் பட்சத்தில், துறை ரீதியாக பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புன்னகைக்குச் சொந்தக்காரர், தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

அரசு தொழிற்பயிற்சிக் கல்லூரி தமிழகத்திலே விருத்தாசலம் தொகுதியில் மட்டும்தான் இயங்கி வருகிறது. அந்தக் கல்லூரி மாணவர்களுடைய விடுதிக் கட்டடம் இடிந்து விழுந்து, மாணவர்களுடைய விடுதி தற்போது இயங்காமல் இருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

300 மாணவர்கள் பயில்கிற அரசு தொழிற்பயிற்சிக் கல்லூரியில், புதிய மாணவர் விடுதிக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

218—

தொழிற்பயிற்சி நிலையம்

***6494—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.